உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

தேசாடனம்– ஒரு மாதூகரம்

==================

=========
ப்ரசுரம் 12
=========

ஸர்வஜித்-ஹூ
ஐப்பசி-மீ 8உ, வெள்ளிக்கிழமை

24-10-1947

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,
(Regd.)
கும்பகோணம்

(விலை அணா ஒன்று)

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

தேசாடனம்– ஒரு மாதூகரம்

வேதாரண்ய ஸஞ்சாரம் செய்து, பக்ஷத்துடன் வேதாந்த வாக்ய புஷ்பங்களிலிருந்து ப்ருஹ்மானந்த மதுவைச் சேகரித்துப் பருகுவது எப்படி ஒரு பெரு மாதூகரமாயிற்றோ, அதுப்போலத் தேசாடனம் ஒரு சிறு மாதூகரம்.

"தேஷாடனம் பண்டிதமித்ரதாச"

என்பது ஒரு பழமொழியின் பகுதி. ஒருவன் ஸாமான்யனாயிருந்த போதிலும், அவனுக்குத்தேசாடனமும், பண்டிதர்களுடைய ஸ்நேகமும் கிடைத்திருக்குமாயின், அவனுக்கு ஆழ்ந்த நோக்கமும், பகுத்தறிவும், உயர்ந்து பரவிய மனோநிலையும் ஏற்படும். தான் பண்டிதனாயிருப்பதை விட பண்டிதமித்ரனாயிருப்பது பெரும் பாக்கியம். பண்டிதர்களுக்கு சப்தஞானம், அர்த்தஞானம், பதார்த்த தத்வ விவேசனம், பண்டை காலத்துப் பெரியோர்களுடைய கலை ஞானங்களையும், மனோ நிலையையும் மறந்துபோன இக்காலத்தவருக்கு அந்நானாவித சாஸ்த்ரங்களின் பொருள்களை உணர்த்தும் திறன் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும்,

"ஸர்வம் வஸ்து பயான்விதம்"

என்கிற ந்யாயப்படி, தான் பிறரைவிட அறிந்தவன் என்கிற அஹம்பாவமும், தன்னைவிட மற்றொரு பண்டிதன் மிஞ்சியவனாயிருந்தால் அப்பொழுது மத்ஸரமும், மற்றத் தொழில்களை விட இக் கல்வித் தொழிலில் அதிகமாக ஏற்பட இடமுண்டு. பண்டித மித்ரனாயிருந்தாலோ, பண்டிதர்கள் வெகு ச்ரமப்பபட்டுக் கற்ற சாஸ்த்ரங்களின் முடிவுகளை எல்லாம் ச்ரமமில்லாமலேயே தான் அறியப் பெறுவதல்லாமல், அவர்களுக்கு ஏற்படக்கூடிய அஹம்பாவம், மத்ஸரம் முதலியவைகளின் சம்பந்தமில்லாமல், தாமரையிலைப் போலவும் இருக்கலாம். இப்பண்டித மித்ரத் தன்மையைப்போலத் தேசாடனமும் பகுத்தறிவையும், உயரிய நோக்கத்தையும் தரக்கூடியவைகளில் ஒன்று.

தேசாடனம் ஒரு மாதூகரம் எனச் சொல்லப்பட்டது. ஒவ்வோரு தேசத்திலுமுள்ள மக்களின ஆசாரங்களுள்ளும், குணங்களுள்ளும் உத்தமமானவைகளை அறிந்து கைப்பற்றி நடக்கும் நோக்கத்துடன் ஒருவன் தேசாடனம் செய்வானேயானால், மற்றத் துறைகளை விட இத்துறையில் அவன் வெகு விரைவில் மேம்பாடுடையவன் ஆவான், என்பது அனுபவத்திற் கண்டறிந்தது. நமக்குப் பழக்கமுள்ள நம் நாட்டைத் தவிர இதர நாட்டு மக்களிடம் இருப்பனவோ, இருப்பனவாகத் தோற்றுவனவோவாகும் குற்றங்களே நமக்குக் கண்முன் காணப்படுவதால், நம் நாட்டு ஆசாரமே ஏனைய எல்லாவற்றிலும் உயர்ந்ததென

நாம் அஹம்பாவம் கொள்வதும், பிறரை ஏளனமாக நினைப்பதும் மாத்திரமேயன்றி, பிறரிடம் உண்மையில் நல்ல ஆசாரங்களும் குணங்களும் இருந்தாலும், அவைகளை நம்முடைய நிலைமைக்குத் தகுந்தவாறாவது ஏற்றுக்கொண்டு மேம்பாட்டையடைய இடமில்லாமல் போகின்றது. ஒவ்வொரு தேசத்திலும் மாந்தரின் நல்வாழ்க்கை என்னும் மலர்களிலுள்ள குணபாகமெனும் மதுவைச் சேகரித்து, அவைகளில் தான் ஒன்றிக்களிக்கும் தேன் வண்டு எனலாகும். தேசாடன யாத்ரீகன் இம்முறையில் ஒரு மதுகரீ.

நம் நாட்டில் உள்ள மக்கள் உண்ண உட்காரும்பொழுது, தாங்கள் நீர் அருந்துவதற்குத் தங்கள் தங்கள் கலன்களைத் தனித்தனியே எடுத்துவாராது, யாரேனும் ஒருவர் எடுத்து வந்திருந்தால் அவரிடம் இரவலுக்கு நிற்பதோ, ஒரு பாத்திரத்தைக்கொண்டே முறையே எல்லோரும் நீரருந்துவதோ, அல்லது விக்கி விக்கிச் சினங்கொள்வதோ, என்னும் இவ்வலங்கோலங்களைப் பார்கிறோம். புண்ய பூமியான பரத கண்டத்தில் நம் தமிழ் நாட்டை அடுத்து வடக்கிலுள்ளது வடுகநாடென்னும் தெலுங்கு நாடு. நம் நாட்டு எல்லையைத் தாண்டி விட்டால் ஊண்பந்தியில் இக்கோலங்கள் தென்படா. ஒரு குழந்தையாயிருப்பினும் அது தனக்காகத் தனியான ஒரு தீர்த்த பாத்திரத்தைக் கொண்டுவந்து விடும். பெண்டிரும் அன்னம் உண்ணுவதற்கு ஆரம்பிக்கும் முன் பந்திக்கு வர வேண்டுபவர் எல்லோரும் வந்துவிட்டனரா எனப் பார்த்துக் கொண்டு, ஒருவர் வராவிடிலும் அவருக்காக எந்நேரமாயினும் காத்து, பிறகு பகவானை ஸ்மரித்து, தங்கள் இலையிலிட்ட அன்னத்தை பகவானுக்கு நிவேதனம் செய்த பின்னரே அவ்வன்னத்தைத் தொடுவார்கள். குழந்தையாயினும் இந்நியமத்தை மீறாதபடி பழக்கப்பட்டிருக்கிறது. உண்ண உட்காரும்பொழுது காலையில் நீராடி உடுத்த உடுக்கையுடன் உட்காருவதில்லை; குழந்தைமுதல் வேறு மடி வஸ்த்ரங்களைக் கட்டிக்கொண்டே உட்காரும். சற்று விசேஷ வைதீகப்பற்றுள்ளவர்கள் இரண்டாம் முறை நீராடி, அன்று உலர்த்திய வஸ்த்ரத்தைக் கட்டிக்கொண்டே உண்ண உட்காருவார்கள். பகலில் கட்டிக்கொண்ட வஸ்த்ரத்தோடு இரவிலும் உண்ணார். இரண்டாயிரம் மூவாயிரம் பேரடங்கிய பந்தியாய் இருப்பினும் இந் நியம திட்டங்களில் ஒன்றேனும் குறையாமல் நடத்தப்படுகிறது. இந் நியமம் வேதியர்களிடத்தில் மாத்திரம் இல்லாமல் வைச்யர்கள், வேளாளர்கள் எனப்படும் அனேக குலத்தினரிடத்தும் காணப்படுகிறது.

அந்நாட்டு வேதியரில் பலர் வேதசாஸ்த்ரங்களைப் பூர்ணமாய் அறிந்திருப்பார்கள். அவரவர் வீட்டில் நடக்கும் சுபசோபனாதிகளில் வேதசாஸ்த்ரங்கள் அறிந்தவர்களைக்கூட்டி அவரவர்களுக்குத் தகுந்தவாறு ஸன்மானம் செய்வது வழக்கம். இதற்கு ஸதஸ்யம் என்று பெயர். முக்கியமான நகரங்களில் ப்ரதி வருஷமும் பல ஸதஸ்யங்கள் நடைபெற்று, வித்வான்களின் யோக்கியதைக்குத் தக்கவாறு ஸன்மானங்களும் செய்யப்படும்.

இவ்விதமான பழக்கங்கள் உள்ள ஒரு நாட்டவர் நம் தமிழ்நாட்டு ஆஹாரமுறையில் நடக்கும் தீர்த்தபாத்திரமில்லாமல் உட்காருவது, பதார்த்தங்களை இலையில் வைத்தவுடனே கொஞ்சங் கொஞ்சமாக வாயில் போட்டுக்கொள்வது, இன்னும் சிலர் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே கொஞ்சங் கொஞ்சமாக எழுந்து போய் விடுவது, எந்த தீட்டு கலந்தாலும் மடி சுத்தி செய்துகொள்ளாமலும்,

காலைக்கூட அலம்பாமலும், சாப்பிடவதற்கு உட்கார்ந்துவிடுவது முதலியவைகளைக் கண்டால் அவர்களுக்கு நம்மிடம் எவ்விதமான எண்ணம் தோன்றுமென்பதை நாமே ஊகித்துக் கொள்ளலாம். அந் நாட்டவர் பலர் நம் நாட்டிற்கு வந்து தங்களுடைய ஆசாரத்துடன் சாப்பிட சௌகர்யம் ஏற்படாத நிலைமையில் தம் நாடு செல்லும்வரை பட்டினியுடனேயே சென்றிருக்கிறார்கள். (கிருஹஸ்தனுக்கு மாத்யான்ஹிக ஸ்நானமும், தீர்த்தபாத்திரமும் தர்மசாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டிருப்பது அந்நாட்டில் நியமமாக இன்றுவரை கைக்கொள்ளப்பட்டு வருகிறது).

தெலுங்கு நாடு தாண்டி வடக்கே செல்லின், மத்யமாகாணத்தின் தென்பாகமான மஹாராஷ்டிர தேசத்தைக் கடக்க வேண்டியிருக்கிறது. அந்த நாட்டு மக்களும் ஆஹார பந்தி சுத்தி விஷயத்தில் அநேகமாய் இவ்வளவு நியமத்துடனிருக்கிறார்கள். ஆந்திர தேசத்தைவிட அந்நாட்டிலுள்ள ஒரு விசேஷமென்னவென்றால், ஏகாதசி உபவாஸம் விசேஷமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஏகாதசியன்று அரிசிப்பிச்சைகூடப் போடமாட்டார்கள். ஆஷாட சுக்கில துவாதசிமுதல் கார்த்திகை சுக்கில துவாதசிவரை நான்கு மாதங்களில் சாகாவ்ரதமெனும் ஒரு வ்ரதத்தையனுஷ்டித்து, ஏராளமான ப்ராஹ்மண போஜனங்கள் செய்துவைப்பார்கள். இம்மஹாராஷ்டிர ஸ்மார்த்த தேசஸ்த ஆசாரங்கள்தான் அந்த ஸம்பந்தமுள்ள மாத்வர்களிடத்திலும் (ஏகாதசி உபவாஸம், சாகா வ்ரதம் முதலியன) விசேஷமாய் இருந்துவருகின்றன. ஸாமான்யமாகப் போஜனகாலத்தில் எவ்வளவு ஆயிரம் பேர்களுக்கு அன்னமிட்டாலும், ஒவ்வொருவருக்கும் மணைபோட்டுக் கோலமிட்டே அன்னமிடுவார்கள். மாவிலே தண்ணீர் கலந்து செய்யப்பட்ட பண்டங்களைப் பத்தென்று பாவித்து, அதை மறுநாள் வைத்துக்கொள்ளமாட்டார்கள். தத்தாத்ரேயோபாஸனை, கணேசோபாஸனை, ஸத்யநாராயணோபாஸனை இவைகள் மிகுதி. சிவபூஜை பொதுவாக இவ்விடங்களிலுண்டு. துகாராம், ஸமர்த்தராமதாஸர், ஞானதேவர் முதலியோர்களையனுஸரித்த பஜனையும், பொதுவாக பண்டரிபஜனையும் அதிகம். நாகப்பூர் நகரம் வரை இம்மஹாராஷ்டிரதேசமிருக்கிறது.

நாகப்பூர் தாண்டி வடக்கே 20-மைல் சென்றால், ஹிந்துஸ்தானி தேசம் ஆரம்பமாகிறது. அத்தேசத்து ஆசாரம் தெலுங்கு, மஹாராஷ்டிர தேசங்களைப்போலல்லாமல் பல வகைகளிலும் மாறுபட்டிருக்கும். தெலுங்கு, மஹாராஷ்டிர தேசங்களில் பத்தான பதார்த்தங்களைப் பக்குவமான இடங்களை விட்டுக் கையிலோ, வண்டிகளிலோ, ரயிலிலோ வேறு இடங்களுக்கு எடுத்துப்போய்ச் சாப்பிட மாட்டார்கள். ஹிந்துஸ்தானி தேசத்திலோ, தான் அல்லது தன் குடும்பத்தார் சமைத்தாலன்றி வேறு எவர் தொடினும் உண்ணார்.

நாகப்பூருக்கு 20-மைல் வடக்கே முதல் கங்கைக்கரைவரையில் உள்ள தேசத்தில் மாம்ஸம் சாப்பிடுகிறவர்கள் நூற்றுக்கு இருபது பேருக்குக் குறைவாகவே இருப்பர். துருக்கர், கிறிஸ்துவர், ஹிந்துக்களில் மிகத் தாழ்ந்த ஜாதியினரே, மாம்ஸம் சாப்பிடுவார்கள்.

பஞ்சாபி, வங்காளி இவ்விரு பாஷைகள் பேசுமிடங்களைத் தவிர ஹிந்துஸ்தானி பேசப்படும் ஹிந்துஸ்தான தேசத்தில் அநேகமாகப் பந்திபோஜனமென்பதே கிடையாது. ஒருவர் தொட்ட ரொட்டியையோ அன்னத்தையோ மற்றவர் தொடார். ஜலம் கலந்து வெந்ததைத் தொடக்கூடாதென்பதே நியமம். ப்ருஹ்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர நான்கு வர்ணத்தோறும் இந்நியமத்தை யனுஷ்டித்து வருகிறார்கள். ஒரு பிராஹ்மணனுடைய வீட்டில் வேலை செய்யும் குடியானவர்களெனப்படும் புருஷர்களோ, ஸ்திரிகளோ அவ்வீட்டில் மிஞ்சிய அன்னத்தை உட்கொள்ளார். தர்மசாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட பரான்ன நியமம் அந்த ஹிந்துஸ்தானத்திலேயே நிலைநிற்கிறது. அதில் கான்யகுப்ஜ வகுப்பார் மிகுந்த நிஷ்டையுள்ளவர்கள். அதனால்தான் ஹிந்துஸ்தானத்திற்கு ஹிந்துஸ்தானம் என்று பெயர்போலும். தர்மசாஸ்த்ரத்தில் பரான்ன நியமம் விதிக்கப்பட்ட ஸ்தலத்தில் சில பந்துக்களை ஆத்மபந்துக்களாக குறிப்பிட்டு அவர்களுடன் அன்னபோஜனம் செய்தால் பரான்னநியமத்திற்கு விரோதமில்லையென்று கூறப்பட்டிருக்கிறது. அவ்வித ஆத்மபந்துக்களுடன் கூட ஹிந்துஸ்தானிகள் சாதாரணமாகச் சாப்பிடுவதில்லை. கல்யாணம் முதலிய விசேஷ சுபகாலங்களில் பழக்கமில்லாதலால் வெகு அருவருப்புடன் அவர்களுடன் மாத்திரம் சாப்பிடுகிறார்கள். அப்படி நெருங்கிய பந்துக்களை, உனக்கு அவர் என்ன உறவு என்று கேட்டால், 'பாத்கானேவாலா' (சாதம் சாப்பிடக்கூடிய உறவு) என்று பதிலளிக்கிறார்கள். ஸந்யாஸம் கொண்டால்தான் பிராஹ்மண கிரஹங்களிலெல்லாம் ஜலத்தோடு வெந்த அன்னம், வியஞ்சனம் சாப்பிடலாம். நெய்யிலோ, எண்ணையிலோ பொரித்த பதார்த்தங்களுக்கும், பாலைக் காய்ச்சிய ஆடையால் செய்யப்பட்ட பதார்த்தங்களுக்கும் இந்நியமம் கிடையாது. இப்பதார்த்தங்களை யாரும் உண்ணலாம்

ஒரு நாள் காசியில் சுமார் ஐம்பது ஸந்யாஸிகளுக்குப் பிக்ஷை நடந்தது. தென்னாட்டுத் தமிழ்ப் பரிசாரர்கள் சமைத்தார்கள்; பரிமாறினார்கள். ஒரு ஸந்யாஸியுடன் ஒரு ஹிந்துஸ்தானி பிருஹ்மசாரி சிஷ்யனும் வந்திருந்தான். அவனும் இலை போட்டுக்கொண்டான். பத்தில்லாத பதார்த்தங்களையெல்லாம் எனக்கு பரிமாறுங்கள் என்று சொன்னான். அவ்விதமே எல்லா பக்ஷணங்களும் பரிமாறப்பட்டன. ஸந்யாஸிகளுக்குப் பரிமாறுவதற்காக எடுத்துக்கொண்டு போகப்பட்ட வெந்த பருப்பில் ஒரு திவலை கரண்டியிலிருந்து அவனுடைய இலையில் சொட்டிவிட்டது. உடனே அவன் எல்லா பக்ஷணங்களையும் விட்டுவிட்டு எழுந்துவிட்டான்.

இம் மத்தியமாகாணத்தில் வடபாகம் உட்பட்ட ஹிந்துஸ்தான் தேசம் முழுவதிலும் ப்ராஹ்மண அப்ராஹ்மண விவாதமே கிடையாது. நம் நாட்டில் புதிதாகக் கிளம்பியிருக்கும் இவ்வித விவாதங்களைப் பரிகரிக்க ஜாதிவிவேகமில்லாமல் கலப்புப்பந்திபோஜனத்தை ஒரு மார்க்கமாக நவீனர்கள் நினைக்கிறார்கள். அதற்காக அடிக்கடி டீபார்டிகளையும் டின்னர் பார்டிகளையும் ஏற்படுத்துகிறார்கள். இந்த மார்க்கம் இகத்திற்குமில்லாமல் பரத்திற்குமில்லாமல் ஏமாற்றமாகவே முடிகிறது. ஆஹார நியமத்தை நிஷ்டையோடு பரிபாலிக்கிறவர்களிடத்தில்தான் இன்றைக்கும் வெள்ளைகாரர்களுக்கோ, அப்ராஹ்மணர்களுக்கோ உண்மையான மதிப்பிருக்கின்றது. இவ்வித நிஷ்டை எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்குப் பொதுமக்களுக்கு

ப்ராஹ்மண பக்தியும், அதன் வழியே ஹிந்துமதத்தில் பற்றும் குறைகின்றன. ஆகையால் ஹிந்துமதத்திற்கு நஷ்டம் கலப்புப் போஜனத்தினால்தான். ப்ராஹ்மண அப்ராஹ்மண விவாதம் எல்லோரும் பரான்ன நியமத்தையே கைக்கொண்டிருக்கும் ஹிந்துஸ்தானி தேசத்தில் இல்லாதிருப்பதே இதற்கு அத்தாக்ஷி. இந்த விவாதம் என்ற வியாதிக்குத் தர்மசாஸ்த்ரத்தை மீறிச் செய்யப்படும் கலப்பு போஜனமே மருந்து என்பது பெரும் ஏமாற்றம். ஹிந்து தர்மசாஸ்த்ரத்தை அநுஸரித்து, ஆசாரம் என்னும் கடும் பத்தியத்துடன் கூடிய பரான்ன நியமமென்பதே கைகண்ட மருந்து. இது கைகண்டதென்பதற்கு ஹிந்துஸ்தானி தேசமே அத்தாக்ஷி. ஒருகால் அந்நாட்டில் துருக்கர்கள் அதிகமாயிருப்பதால் அந்த கக்ஷியினால் இந்த கக்ஷிக்கு ஸந்தர்ப்பமில்லை என்று நினைக்கலாம். ஆனால் உண்மையில் மத்தியமாகாணம், பீஹார் முதலிய ஹிந்துஸ்தானி தேசங்களில் நம் தமிழ் நாட்டைவிட துருக்கர்களுடைய வீதாசார ஸங்கியை குறைவே. ஆயினும் அங்கு ப்ராஹ்மண அப்ராஹ்மண விவாதம் கிளம்ப முடியவில்லை. ஏனென்றால் அந்த ரோகத்தைத் தடுக்கப் பத்தியமும் நியமும் வெகு தீவிரமாய் அனுஷ்டிக்கப்பட்டே வருகின்றன. ப்ராஹ்மண வைச்ய சூத்திரர்கள் எல்லோருக்குமே ஆசார ஆஹார நிஷ்டைகள் நியமமாகவே இருந்துவருகின்றன. வேதபாராயணம் ஒன்று ப்ராஹ்மணர்களுக்கு அதிகமேதவிர, இதர ஆசாரங்களில் குடியானவர்கள்கூட ப்ராஹ்மணர்களுக்குக் குறைந்தவர்களல்லர். ஆகையால் ஆஹார பந்தியைப்பற்றி உயர்ந்தது தாழ்ந்தது என்ற விவாதத்திற்கு இடமில்லை.

நான்கு வர்ணத்தாரும் ஏழை பணக்காரன் என்கிற வித்தியாசமில்லாமல், ஆஹார நியமத்தோடு இருப்பதைத்தவிர, எல்லோரும் சிகையையும் ரக்ஷித்துவருகிறார்கள். ஹிந்துஸ்தானி தேசத்தில் சிகையில்லாதவன் துருக்கன் ஒருவனே. துருக்க ஹிந்து சண்டைகளிலும் ஹிந்துக்கள் அதிகமாய் மரணமடைந்திருக்கும்போதுகூட, துருக்கர்கள் தங்களைத்தான் ஹிந்துக்கள் அதிகமாக கொன்றுவிட்டார்கள் என்று அதிகாரிகளுக்குக் காட்டுவதற்காக, சவங்களிலிருக்கும் சிகைகளைக் கத்தரித்துவிடுவார்கள், என சில ஸமயங்களில் பத்திரிக்கைகளில் படித்திருக்கிறோம்.

நீலக்குடி கிருஷ்ணய்யர் காசியிலிருக்கும் திருவாடுதுறை மடத்தின் நிர்வாக அதிகாரி. திருவாடுதுறை மடத்திற்கு காசியில் ஒரு நீதி வழக்கு இருந்தது. அதை முடிப்பதற்காக காசியிலிருந்து ஒரு வக்கீலை அழைத்துக்கொண்டு கிருஷ்ணய்யர் திருவாடுதுறைக்கு வந்து சேர்ந்தார். இந்நாட்டுச் சைவவக்கீல் ஒருவரும் அங்கு இதற்காக வந்திருந்தார். எல்லாம் முடிந்தபிறகு மடாதிபதி அந்தச் சைவவக்கீலுக்கு ஆசீர்வாதத் திருநீறிட்டார். அப்பொழுது காசி வக்கீல் கிருஷ்ணய்யரிடம் காதில் ஏதோ முணுமுணுத்தார். மடாதிபதி என்னவென்று கேட்டார். கிருஷ்ணய்யர் அதிக விசேஷமொன்றுமில்லை என்று சொன்னார். மடாதிபதி திரும்பவும் நிர்ப்பந்தப்படுத்திக் கேட்டார். அப்பொழுது கிருஷ்ணய்யர் சொன்னதாவது:- இத்தென்னாட்டில் துருக்கர்கள் கூடத் திருநீறு இட்டுக் கொள்ளுகிறார்களே! என்ன ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ! என்று ஆச்சரியத்துடன் தம்மைக் கேட்டதாகவும், அப்படி மகம்மதியர் இந்நாட்டிலும் திருநீறிட்டுக்கொள்வதில்லையே என்று தாம் பதில் சொன்னதாகவும், இதோ இந்த வக்கீல் மடாதிபதியிடம் விபூதி இட்டுக்கொள்கிறாரே என்று அவர் சொன்னதாகவும், அவர் சைவராயிற்றே என்று

தாம் சொன்னதாகவும், அவருக்குச் சிகையில்லையே, அவர் முஸ்லீம் அல்லவா ? என்று அக் காசி வக்கீல் கேட்டதாகவும் அறிவித்தார். இந்த நிகழ்ச்சி ஸமீபத்தில் ஐந்து வருஷங்களுக்குள் நடந்தது. இக்காலத்திலுங்கூட இங்கிலீஷ் படித்த ஹிந்துஸ்தானிகள் சிகையில்லாமல் ஒரு ஹிந்து உண்டா என்று ஆச்சர்யப்படுகிறார்கள். வங்காளத்திலும் பஞ்சாபிலும் இந்த ஆச்சர்யமில்லை. ஹிந்துஸ்தானத்தைப் பற்றியே நாம் இப்பொழுது சொல்லுவது.

ஹிந்துஸ்தான தேசத்தில் ஓடும் ஜலத்திலோ குளத்திலோ ஒருவரும் மலஜல சௌசம் செய்துகொள்ளார். சௌசமோ அல்லது பானமோ, தம் தம் பாத்திரங்களைக்கொண்டே செய்துகொள்வர். மஹாளயபக்ஷம் பதினைந்து நாட்களிலும் எல்லா வர்ணத்தார்களும் தர்ப்பணம் தவறாது செய்வர். ஒருவர் பாத்திரத்தால் மற்றொருவர் பானம் செய்யார். இதற்கு ஒரு அத்தாக்ஷி:- ரயில்வே ஸ்டேஷன்களில் பால் விற்கப்படுகிறது; அதற்கு அரையணா விலை என்றால் அவ்விலை பாலை பெய்துகொடுக்கும் சிறு கலயத்தையும் சேர்த்தே ; வாங்குபவர் அப்பாலைக் குடித்துவிட்டு அக்கலயத்தையும் உடைத்துவிடுவார். இப்படி இருக்கும் ஊரில் சோற்றுக்கிளப்போ இட்டலிக்கிளப்போ எங்கேயாவது இருக்குமா? அந்நாட்டில் எங்கேயாவது இக்கிளப்புகள் இருந்தால், அது தமிழன் சாப்பிடும் கிளப்பே என்று தீர்மானித்துக் கொள்ளலாம். எவரும் ஸ்நானம் செய்யாமல் எதையும் வாயில் போட்டுக்கொள்ளமாட்டார்கள்.

மனுஸ்ம்ருதியில், கங்கை, யமுனை, இந்நதிகளின் இடையில் உள்ள நாட்டிற்கு மத்யதேசம் என்றும், அதனிடையில் ஸரஸ்வதி, த்ருஷத்வதி இவ்விரண்டு நதிகளுக்கு இடையில் உள்ள தேசங்களுக்குப் ப்ருஹ்மரிஷி தேசமென்றும் பெயரிடப்பட்டிருக்ககிறது. அந்த தேசத்திலுள்ள வேதியருடைய ஆசாரங்களைக்கொண்டு உலகில் உள்ள மாந்தரனைவரும் தங்களைச் சீர்த்திக்கொள்ளக் கடவர், என்று மனு உபதேசித்திருக்கிறார்.

ஏததேஷப்ரஸூதஸ்ய சகாஷாதக்ரஜன்மன: |
ஸ்வம் ஸ்வம் சரித்ரம் ஷிக்ஷேரன் ப்ருதிவ்யாம் சர்வமானவா: ||

இதனால் மனுவின் காலத்தில் உலக முழுவதும் வைதிகமதமான ஹிந்துமதமாகவே இருந்தது என்று தெரிகிறது.

ஹிந்துஸ்தானி தேசத்தில் மாம்ஸம் சாப்பிடுகிறவர்கள்கூட வெங்காயத்தைத் தொடார். குஜராத் தேசத்திலும், ராஜபுதனம் என்னும் மார்வாடி தேசத்திலும், ஹிந்துக்களில் மாம்ஸம் தின்பவர்கள் நூற்றுக்கு இருபதிலும் குறைவாகவே இருப்பர். மார்வாடிகள் எலும்பினால் சுத்தி செய்யப்பட்ட சர்க்கரையையோ, கற்கண்டையோ தொடார். அவர்களுக்கெனப் பழுப்பு சர்க்கரையும் கற்கண்டும் தயாரிக்கப்படுகிறது. எங்கும் கோரக்ஷண சாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் மஹாராஷ்டிர ப்ராஹ்மணர்களால் நடத்தப்பட்ட சுதந்திரப் போர்களில் யுத்தகளத்திலேயே சிவபூஜை நடத்தப்படுமாம்.

மார்வாட் குஜராத்தி ப்ராந்த்யத்திலுள்ள வல்லப மதஸ்தர்கள் இன்றும் குழாய் ஜலத்தை உபயோகிப்பதில்லை.

மகாராஷ்டிரத்திற்கு தெற்கேயுள்ள கொங்கணம், துளு, மலையாளம் இத்தேசங்களில், அதிலும் விசேஷமாய் மலையாளத்தில், அமிழ்ந்து மூழ்கி ஸ்நானம் செய்தாலொழிய நீரை எடுத்து விட்டுக் கொண்டு குளிப்பது ஸ்நானமாகக் கருதப்படுவதில்லை. ஆலயங்களில் ஸ்நானம் செய்த மடியுடன் அல்லாது ஒருவரும் பிரவேசிப்பதில்லை. அந்நாட்டு வேதியரில் நூற்றுக்கு தொண்ணூறு பேர்களுக்கு மேல் வேதாத்யயனம் பூர்த்தியாகச் செய்தவர்கள். அந்நாட்டிலுள்ள தமிழ் ப்ராஹ்மணர் ப்ரதி மாதமும் அவரவர் ஜந்மநக்ஷத்ரத்தன்று ருத்ரைகாதசீ நடத்துவார்கள்.

நம் நாட்டு ப்ராஹ்மணர்கள் ஸ்நானம் செய்யாது, காவேரியில் சௌசத்தை மாத்ரம் செய்துகொண்டு, கிளப்புக்குள் நுழைந்து, வெங்காயம் கலந்த வடை, உப்புமா இவைகளைத் தின்றுவிட்டு, துருக்கனுக்கு பக்கத்து நாற்காலியில் தாம் உட்கார்ந்துகொண்டு, துருக்கன் குடித்த பாத்ரத்தில் தாமும் குடித்துவிட்டு, வெளியில் வந்து, தாம் உயர்ந்த ப்ராஹ்மணர்கள் என்று கூறிக்கொண்டால், இவர்களைப் பார்த்து ஹிந்துஸ்தானி தேசத்திலுள்ள ஒரு குடியானவன் என்ன நினைப்பான் ?

நம்முடைய சென்னை ராஜதானி முழுவதிலும் சுமார் 150 ஸமஸ்க்ருத பாடசாலைகள் இருக்கின்றன. ஐக்கியமாகாணம் ஒன்றில் 1500 பாடசாலைகள் இருக்கின்றன. பீஹார் மாகாணத்திலும் அவ்வளவு இருக்கின்றன. இவ்வளவு அதிகமாய் இருப்பதற்கு முக்கியமான ஸௌகர்யம் ஒவ்வொரு மாணவனுக்கும் கொஞ்சம் ரொட்டி மாவு தான் தேவை. பால்யத்திலேயே தன் ரொட்டியைத் தானே தட்டிக் கொள்வான். இதனால் பாடசாலை ஏற்படுத்துவது வெகு சுலபமாக இருக்கிறது. நம் நாட்டிலோ ஐம்பது வயதுக்கு மேல் கல்யாணம் செய்துகொள்பவனை, ஏன் இவ்விதம் ஒரு கன்னிகையைக் கெடுக்கிறாய் என்று கேட்டால், வீட்டில் சாப்பாட்டுக்கு என்ன செய்வது, என்று பதில் சொல்லுகிறான். தன் உணவைத் தானே பக்குவம் செய்து உண்ணப் பழக்கிக்கொள்ளாத குற்றம் நம் நாட்டில் எவ்வளவு ஆபாஸ அனாசாரங்களுக்கும், பாதகச் செயல்களுக்கும், கல்வி அழிவதற்கும், ஜாதி த்வேஷம் தலைவிரித்தாடுவதற்கும் காரணமாகின்றது என்பது தேசாடன மாதுரகரத்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறியப்படுகிறது.

வங்காளத்தில் விதவா தர்மம் வெகு நியமத்துடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. எந்த ஜாதி விதவையும் தலையில் மயிர் வைத்திராள். மாம்ஸமே உண்ணாள். வீட்டில் தனியே சமைத்து உண்பாள். ஏகாதசியன்று வாயில் ஜலத்திவலையும் பட விடாள். ஆடவர் தங்கள் பித்ருக்களுக்கு முதல் ஆப்திக ஸ்ராத்தம் வருங்கால் தங்கள் சொத்தில் ஒரு பகுதியை அந்த ஸ்ராத்தத்திற்கு உபயோகிப்பார். விசேஷ வைதிக ச்ரத்தை உள்ளவர்கள் இரண்டு வர்க்கங்களிலுமுள்ள மூன்று பித்ருக்களுக்கும் அந்தந்தத் திதிகளில் மொத்தம் ஆறு ச்ராத்தங்கள் செய்து வருகிறார்கள். கண்ணனைப் பற்றிப் பாடி ஆடி கூத்தாடுவார்கள். ஒவ்வொரு குடியானவனும், பஸ்ஸில் செல்லும் ஒவ்வொரு பிரயாணியும், அம்பிகையை நினைத்து விட்டால், கரகரவென்று கண்ணீர்விட்டு உருகிவிடுவான். இவ்வுருக்கமே *வந்தே மாதரம்* என இந்தியா முழுவதும் முழங்கும் முழக்கத்தின் வேர்.

வங்காளத்துக்கு வடமேற்கிலுள்ள மிதிலை நாட்டில் ப்ராஹ்மணர்கள் மிகுதி. தர்ப்பங்கா ராஜனே ப்ராஹ்மணர். அதிலும் ஸ்ரோத்ரியர் என்னும் சிஷ்ட வகுப்பைச் சேர்ந்தவர். அந் நாடு முழுவதிலும் ஒரு கிராமத்தில் நூறு ப்ராஹ்மணர்கள் இருந்தால் அதில் எழுபது பேர் பண்டிதர்கள். நமது சாஸ்த்ர நூல்கள் எழுதியவர்களில் மைதிலர்களே அதிகம். அவர்கள் கூடியவரை ப்ரதிக்ரஹம் வாங்கமாட்டார்கள்.

பீஹார் மாகாணத்திலுள்ள ஸ்த்ரீகள் எந்த ஜாதியினராயினும் எக்காலத்தும் வீட்டை விட்டு வெளியே கிளம்பார். ஆகையால் வீட்டிற்கு வெளியே தென்படார்.

வங்காளத்துக்கு தெற்கே உத்கல தேசம் இருக்கிறது. அதற்கு ஒரிஸ்ஸா என்று இக்காலத்துப் பெயர். அந்நாட்டில் ஒவ்வொரு ஊரிலும், சிவாலயங்களிலும், விஷ்ணு ஆலயங்களிலும், விசேஷ பூஜா நிவேதனங்களும், உத்ஸவங்களும், உத்ஸவ மண்டபங்களும், தெப்பக்குளங்களும், அநேகவித வாத்யங்களும் விளங்கி வருகின்றன. அந் நாட்டிலுள்ள வேதியர்கள் நம் நாட்டுப் பழைய வேதியரைப் போல அடர்ந்த சிகையுடன் காணப்படுகின்றனர். அந் நாட்டிலுள்ள எச்சசாதியினரும் மல விஸர்ஜனம் செய்தால் ஸ்நானம் செய்யாமல் இரார். அந்நாட்டு வேதியரில் நூற்றுக்கு எண்பது பெயர் இன்னும் சிவபூஜையும், வைச்வதேவத்தையும் விடாது நடத்தி வருகிறார்கள். அந்நாட்டில் எவரும் சுருட்டே குடியார். அந்நாட்டு வேதியர்க்குள் ஒரு வீட்டில் ஒரு சிறு பையனே வார்ஸாக இருந்தாலும், அவனுக்குச் சீக்கிரத்தில் உபநயனம் செய்விக்கப்பட்டு அவனே சிவபூஜையைச் செய்கிறான். இச் சிவமே தேசாடன மாதூகரத்தின் தேன்.

இவ்விதம் ஒவ்வொரு நாட்டில் தர்மசாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆசாரம் கையாளப்பட்டு, ஊக்கத்துடன் இன்றுவரை ரக்ஷிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் தர்மசாஸ்த்ர விரோதமான சில அனாசாரங்கள் இருப்பினும், எந்தச் சாஸ்த்ரீய ஆசாரம் எந்த தேசத்தில் ஊக்கத்துடன் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறதோ, அந்தக் குணபாகத்தைக் கிரஹித்து, தான் மேம்படுவதே தேசாடனத்தின் முக்கிய உத்தேசம்.

இப்படிக்கு,
வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.